உ

கணபதி துணை

சிதம்பரம் பச்சகந்தையர்மடத்துச்

சென்னமல்லையர் அருளிச்செய்த

# சிவசிவவெண்பாவும்,

திருவாவடுதுறைச்

சிவஞானசுவாமிகள் அருளிச்செய்த

சோமேசர்

# முதுமொழிவெண்பாவும்.

இவை

சிதம்பரம்

அ. இரத்நசபாபதிமுதலியாரால்

சென்னபட்டணம்:

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

சர்வசித்து௵ மார்கழி௴

(Copyright Reserved.)

உ

கணபதி துணை.

# சிவசிவவெண்பாவும்,

## சோமேசர்

# முதுமொழிவெண்பாவும்.

### காப்பு.

தெள்ளுலகநீதிசிவசிவாவென்றுதிரு
வள்ளுவர்வெண்பாவால்வழுத்துறவெற்—குள்ளதுணை
கந்தனிலீராறுனைகைமேவியகருணைத்
தந்திமுகன்செம்பதுமத்தாள்.

மதுவளரும்பூஞ்சடிலமல்குசோமேசர்
முதுமொழிவெண்பாவைமொழியப்—பொதுளு
மடம்பிடுங்கியன்பர்க்குவான்வீடளிக்குங்
கடம்பொழிமுக்கட்களிறு.

### அவையடக்கம்.

சிவசிவாவென்பாரிச்செய்யுட்டிறந்தேர்ந்
தேவர்களுமென்றஞ்சாதிசைத்தேன்—கவிஞரியற்
பண்பாலுரைத்தபழமொழிமுன்னீதுமொரு
வெண்பாநூலாய்விளங்கவே.

## கடவுள்வாழ்த்து.

உற்பிரம்பாலுற்றவடுமேவவுலகெங்குநிறை
சிற்பரனேதெய்வஞ்சிவசிவா—சொற்சிறந்த
அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு. (க)

சீர்கொளிறையொன்றுண்டத்தெய்வநீயென்றொப்பாற்
சோர்விலடையாற்றெளிந்தோஞ்சோமேசா—வோரில்
அகரமுதலவெழுத்தெல்லாமாதி
பகவன்முதற்றேயுலகு. (க)

## வான்சிறப்பு

பூமலர்கொணேரியற்கும்பூவையர்க்கும்பூமழைசெய்
தீமைநலங்கண்டோஞ்சிவசிவா—பூமுற்
கெடுப்பதூஉங்கெட்டார்க்குச்சார்வாய்மற்றாங்கே
யெடுப்பதூஉமெல்லாமழை. (உ)

நேயபுகழ்த்துணையார்நீராட்டுங்கைதளர்ந்துன்
றாயமுடிமேல்வீழ்ந்தார்சோமேசா—வாயுங்கால்
தானந்தவமிரண்டுந்தங்காவியனுலகம்
வானம்வழங்காதெனின். (உ)

## நீத்தார்பெருமை.

நல்லசுகருக்கன்றிநாணுவதென்வேதமுனி
செல்லமடவார்சிவசிவா—சொல்லி
னுரனென்னுந்தோட்டியானோரைந்துங்காப்பான்
வரனென்னும்வைப்புக்கோர்வித்து. (ங)

அத்திரவாக்காற்புத்தன்சென்னியறுத்தார்சண்பைச்
சுத்தனார்தம்மன்பர்சோமேசா—நித்த
நிறைமொழிமாந்தர்பெருமைநிலத்து
மறைமொழிகாட்டிவிடும். (ங)

## அறன்வலியுறுத்தல்.

எய்தருமம்பாலுயிர்நீத்தெய்துபொழுதுங்கன்னன்
செய்தருமமீந்தான்சிவசிவா—வுய்யுநெறி
யொன்றறிவாமென்னுதறஞ்செய்கமற்றது
வொன்றுங்காற்பொன்றாத்துணை. (௪)

நக்கனூர்வேள்வித்தவத்தைமேற்கொண்டிருந்தும்
தோக்கவறமாயிற்றேசோமேசா—மிக்க
அழுக்காறவாவெகுளியின்னாச்சொன்னான்கு
மிழுக்காவியன்றதறம். (௪)

## இல்வாழ்க்கை.

எய்துசவுபரிக்கள்ரீன்றமகளாரைமணஞ்
செய்யவரசீந்தான்சிவசிவா—துய்யதவத்
தாற்றினொழுக்கியறனிழுக்காவில்வாழ்க்கை
நோற்பாரினோன்மையுடைத்து. (௫)

இல்வாழ்தருமனியற்சந்திரசேனன்
றொல்வார்த்தைகீழ்ப்படுத்தான்சோமேசா—நல்ல
இயல்பினானில்வாழ்க்கைவாழ்பவனென்பான்
முயல்வாருளெல்லாந்தலை. (௫)

## வாழ்க்கைத்துணைநலம்.

சத்தியந்தப்பாமலரிச்சந்திரற்குச்சந்த்ரமதி
சித்தமொருமித்தாள்சிவசிவா—புத்தியுடன்
தற்காத்துத்தற்கொண்டாற்பேணித்தகைசான்ற
சொற்காத்துச்சோர்விலாள்பெண். (௬)

மூவர்தடுப்பவுங்கொண்மூவைப்பணிகொண்டா
ளயவனசூயைசோமேசா—மேவுபிற
தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யுமழை. (௬)

## புதல்வரைப்பெறுதல்.

மறலிசெயன்மாற்றிவயதரனூற்பெற்ற
திறன்மகப்பேருஞ்சிவசிவா—பெறுபே
றெழுபிறப்புந்தீயவைதீண்டாபழிபிறங்காப்
பண்புடைமக்கட்பெறின். (எ)

பாடினர்மூவாண்டினிற்சம்பந்தரெனயாவோருங்
கூடுமகிழ்ச்சிமெய்யேசோமேசா—நாடியிடில்
தம்மிற்றம்மக்களறிவுடைமைமாநிலத்து
மன்னுயிர்க்கெல்லாமினிது. (எ)

## அன்புடைமை.

வேந்துரையாற்பூசைபுரிவேடன்மனைவெந்திமுன்போற்
சேர்ந்துபணிசெய்தாள்சிவசிவா—வோர்ந்தவிடத்
தன்பின்வழியதுயிர்நிலையஃதிலார்க்
கென்புதோல்போர்த்தவுடம்பு. (அ)

தோன்றுவகைகரந்துந்தோன்றலைக்கண்டுண்ணெகிழ்ந்து
தோன்றநின்றுன்முன்புனளன்சோமேசா—தோன்றுகின்ற
அன்பிற்குமுண்டோவடைக்குந்தாழார்வலர்
புன்கணீர்பூசறரும். (அ)

## விருந்தோம்பல்.

அன்னமிடான்பொன்னுடைடைந்துந்தனதுடலைத்
தின்னெனவேதின்றுன்சிவசிவா—மன்னியயற்
செல்விருந்தோம்பிவருவிருந்துபார்த்திருப்பா
னல்விருந்துவானத்தவர்க்கு. (கூ)

பொன்னனையாளன்பருக்கேபோனகமீந்துன்னருளாற்
சொன்னமிகப்பெற்றுளேசோமேசா—பன்னில்
வருவிருந்துவைகலுமோம்புவான்வாழ்க்கை
பருவந்துபாழ்படுதலின்று. (கூ)

## இனியவைகூறல்.

குன்றெடுத்தானின்சொற்கொடுகருணைவாரிதிலையச்
சென்றெடுத்தின்புற்றான்சிவசிவா—நன்றெடுத்த
வின்சொலினிதீன்றல்காண்பானெவன்கொலோ
வன்சொல்வழங்குவது. (௧0)

இன்சொலிராமனியம்பவிரேணுகைசெய்
துன்பமொழியேபுகன்றான்சோமேசா—வன்புடைய
இன்சொலினிதீன்றல்காண்பானெவன்கொலோ
வன்சொல்வழங்குவது. (௧0)

## செய்ந்நன்றியறிதல்.

பூடணம்போல்வீடணன்மேற்போனவேலேற்றநன்றி
தேடமுடியாதேசிவசிவா—நாடியெதிர்
செய்யாமற்செய்தவுதவிக்குவையகமும்
வானகமுமாற்றலரிது. (௧௧)

பன்னுமசதிநன்றிபாராட்டிக்கோவைநூல்
சொன்னானேயெளவைமுன்புசோமேசா—மன்னத்
தினைத்துணைநன்றிசெயினும்பனைத்துணையாக்
கொள்வர்பயன்றெரிவார். (௧௧)

## நடுவுநிலைமை.

நங்கையுமைசொல்லானடுவிகந்தமால்வெருவு
செங்கணரவானான்சிவசிவா—வெங்குஞ்
சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்
கோடாமைசான்றோர்க்கணி. (௧௨)

வேதியனாளாமோவென்றெள்ளாதுவெண்ணெய்நல்லூர்ச்
சோதிவழக்கேபுகழ்ந்தார்சோமேசா—வோதிற்
சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற
கோடாமைசான்றோர்க்கணி. (௧௨)

## அடக்கமுடைமை.

இறைமுருகன்முன்னின்றிசைத்தமொழிதேரான்
சிறையிருந்தான்முன்சிவசிவா—புறவுறுப்பின்
யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்
சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. (கந)

எல்லாமுணர்ந்தும்வியாதனியம்பியவச்
சொல்லாலேநாவயர்ந்தான்சோமேசா—வல்லமையால்
யாகாவாராயினுநாகாக்ககாவாக்காற்
சோகாப்பர்சொல்லிழுக்குப்பட்டு. (கந)

## ஒழுக்கமுடைமை.

தன்மதுரைசொன்னபழிக்கஞ்சித்தகவுரைத்தான்
றென்மதுரைநாதன்சிவசிவா—வென்னி
னொழுக்கமுடையவர்க்கொல்லாவேதீய
வழுக்கியும்வாயாற்சொலல். (கச)

தீயனவேசொல்லுஞ்சிசுபாலன்முன்புகண்ணன்
றூயதலாச்சொல்லுரையான்சோமேசா—வாயின்
ஒழுக்கமுடையவர்க்கொல்லாவேதீய
வழுக்கியும்வாயாற்சொலல். (கச)

## பிறனில்விழையாமை.

வரமிழந்தான்சீதையினல்வாழ்விழந்தான்பத்துச்
சிரமுமிழந்தான்சிவசிவா—வுரமா
மெனைத்துணையராயினுமென்னாந்தினைத்துணையுந்
தேரான்பிறனில்புகல். (கரு)

ஆன்றவெழிற்சீதையைவேட்டைந்நான்குதிண்கரத்தான்
றோன்றுபழிமாறிலனேசோமேசா—வேன்ற
பகைபாவமச்சம்பழியெனநான்கு
மிகவாவாமில்லிறப்பான்கண். (கரு)

## பொறையுடைமை.

ஐவரினுமுன்னோனரசவையிலேபொறுத்த
செய்கைபெரிதன்றோசிவசிவா—வையத்
தொறுத்தாரையொன்றாகவையாரேவைப்பர்
பொறுத்தாரைப்பொன்போற்பொதிந்து. (கசு)

ஒட்டலன்செய்தீமைக்கொருதுகமரென்றுரைத்தார்
சட்டியசீர்மெய்ப்பொருளார்சோமேசா—முட்ட
ஒறுத்தார்க்கொருநாளேயின்பம்பொறுத்தார்க்குப்
பொன்றுந்துணையும்புகழ். (கசு)

## அழுக்காறாமை.

மேருவுடனிகலிவிந்தமலைவீறழிந்து
சேருநிலனூடேசிவசிவா—வோரி
னழுக்காறெனவொருபாவிதிருச்செற்றுத்
தீயுழியுய்த்துவிடும். (கஎ)

அன்பரைக்கண்டழுக்காறுஞ்சமணர்தம்வாயாற்
றுன்பமுற்றார்வெங்கழுவிற்சோமேசா—வன்பாம்
அழுக்காறுடையார்க்கதுசாலுமொன்னார்
வழுக்கியுங்கேடீன்பது. (கஎ)

## வெஃகாமை.

வாசவனோராசைகொளவந்தபலனையிந்தத்
தேசமறியாதோசிவசிவா—பேசுங்காற்
சிற்றின்பம்வெஃகியறனல்லசெய்யாரே
மற்றின்பம்வேண்டுபவர். (கஅ)

நின்னபிடேகப்பழத்தைநீண்மறையோர்க்கீந்தவிறை
துன்னுகுடியோடழிந்தான்சோமேசா—பன்னில்
நடுவின்றிநன்பொருள்வெஃகிற்குடிபொன்றிக்
குற்றமுமாங்கேதரும். (கஅ)

## புறங்கூறாமை.

குந்திமகார்பேறுரைத்தகொற்றவனுந்தன்வரவுஞ்
சிந்தைசெயலுற்றான்சிவசிவா—நிந்தை
பிறன்பழிகூறுவான்றன்பழியுள்ளுந்
திறந்தெரிந்துகூறப்படும். (கூ)

கூனியிராமன்பிரிந்துபோமாறேகூறினளே
தூநறும்பூங்கொன்றையணிசோமேசா—தானே
பகச்சொல்லிக்கேளிர்ப்பிரிப்பர்நகச்சொல்லி
நட்பாடறேற்றாதவர். (கூ)

## பயனிலசொல்லாமை.

மன்னவையிற்சொன்னவசையாற்சிசுபாலன்
சின்னமுற்றானன்றேசிவசிவா—வென்னிற்
பயனில்சொற்பாராட்டுவானைமகனெனல்
மக்கட்பதடியெனல். (உ0)

சேக்கிழார்சிந்தாமணிப்பயிற்சிதீதெனவே
தூக்கியுபதேசித்தார்சோமேசா—நோக்கிற்
பயனில்சொற்பாராட்டுவானைமகனெனல்
மக்கட்பதடியெனல். (உ0)

## தீவினையச்சம்.

பாரமுடிபத்தும்பறித்தபழிசேதுவினிற்
தீருதவினாலேசிவசிவா—சாருமிகற்
றீயவைதீயபயத்தலாற்றீயவை
தீயினுமஞ்சப்படும். (உக)

குற்றொருவர்க்கூறைகொண்டுகொன்றதிம்மையேகூடச்
சொற்றதுகைகண்டோமேசோமேசா—வற்றான்
மறந்தும்பிறன்கேடுசூழற்கசூழி
னறஞ்சூழுஞ்சூழ்ந்தவன்கேடு. (உக)

## ஒப்புரவறிதல்.

தாயைத்தடிகவென்றதந்தைமொழிதவருச்
சேயைப்போலுண்டோசிவசிவா—வாயுமிடத்
தொத்ததறிவானுயிர்வாழ்வான்மற்றையான்
செத்தாருள்வைக்கப்படும். (௨௨)

பண்டைநினைவெண்ணிநொந்தார்பாகஞ்செய்மாறராந்
தொண்டர்மனைவியார்சோமேசா—கண்டோ
நயனுடையானல்கூர்ந்தானுதல்செயுநீர
செய்யாதமைகலாவாறு. (௨௨)

## ஈகை.

தந்தைக்கிளமைதரும்பூருவைநிகர்வார்
சிந்திக்கினெங்கேசிவசிவா—நிந்தித்
திலனென்னுமெவ்வமுரையாமையீதல்
குலனுடையான்கண்ணேயுள. (௨௩)

மீனென்றுரைப்பளவுமிக்குவகைபெற்றிலர்வன்
றொளரியற்பகையார்சோமேசா—நீளுலகில்
இன்னாதிரக்கப்படுதலிரந்தவ
ரின்முகங்காணுமளவு. (௨௩)

## புகழ்.

ஓடிவருபுட்கின்றுடலையரிந்தீந்தபுகழ்
தேடவரிதேசிவசிவா—நாடிவரி
னீதலிசைபடவாழ்தலதுவல்ல
தூதியமில்லையுயிர்க்கு. (௨௪)

போசன்கவிஞருக்கேபோதப்பரிந்தளித்துத்
தூசிலாக்கீர்த்திகொண்டான்சோமேசா—வாசையுடன்
ஈதலிசைபடவாழ்தலதுவல்ல
தூதியமில்லையுயிர்க்கு (௨௪)

## அருளுடைமை.

அன்றுமகப்பெறுவாட்கன்னைவடிவாகியரன்
சென்றுதுணைசெய்தான்சிவசிவா—வென்று
மருட்செல்வஞ்செல்வத்துட்செல்வம்பொருட்செல்வம்
பூரியார்கண்ணுமுள. (உரு)

மூர்த்திபால்வன்கண்மைமூண்டவடுகரசன்
சூர்த்திறந்தானுய்ந்தானேசோமேசா—கூர்த்த
பொருளற்றார்பூப்பரொருகாலருளற்றா
ரற்றார்மற்றாதலரிது. (உரு)

## புலான்மறுத்தல.

புன்புலாலுண்ணுதுபுள்ளடைந்தநன்கறிவார்
தின்பரோதின்னார்சிவசிவா—துன்புறாஉந்
தன்னூன்பெருக்கற்குத்தான்பிறிதூனுண்பா
னெங்ஙனமாளுமருள். (உசு)

மச்சஞ்சுமந்துய்ப்பவானோர்ப்பணிகொண்டான்
றுச்சனுஞ்சூரபன்மன்சோமேசா—நிச்சயமே
தன்னூன்பெருக்கற்குத்தான்பிறிதூனுண்பா
னெங்ஙனமாளுமருள். (உசு)

## தவம்.

ஆடும்பரிசேவலானனடற்சூரன்
றேடுந்தவத்தாற்சிவசிவா—நாடுங்கால்
வேண்டியவேண்டியாங்கெய்தலாற்செய்தவ
மீண்டுமுயலப்படும். (உஎ)

ஏர்மணநல்லூர்ச்சுடருள்யாருமணுகச்சிலர்தாந்
தூநெறிநின்றயர்ந்தார்சோமேசா—வோரில்
தவமுந்தவமுடையார்க்காகுமவமதனை
யஃதிலார்மேற்கொள்வது. (உஎ)

## கூடாவொழுக்கம்.

அட்டுநரனுனிட்டரக்கன்பழிக்கரசைத்
தெட்டிவழிகொண்டான்சிவசிவா—கிட்டினர்க்குப்
பற்றற்றேமென்பார்படிற்ருெழுக்கமெற்றெற்றென்
றேதம்பலவுந்தரும். (உஅ)

மாயனவ்வேடங்கொண்டேவன்சலந்தரன்கிழத்தி
தூயநலங்கவர்ந்தான்சோமேசா—வாயின்
வலியினிலைமையான்வல்லுருவம்பெற்றம்
புலியின்றேல்போர்த்துமேய்ந்தற்று. (உஅ)

## கள்ளாமை.

இல்வல்லன்வாதாவிகபடேதாயதுமலயச்
செல்வமுனிநோக்காற்சிவசிவா—சொல்லிற்
களவினலாகியவர்க்கமளவிறந்
தாவதுபோலக்கெடும். (உகூ)

நாய்வாற்களவினன்ஞாலமிகழப்பட்டான்
றூயனுங்காதிமகன்சோமேசா—வாயதனுல்
எள்ளாமைவேண்டுவானென்பானெனைத்தொன்றுங்
கள்ளாமைகாக்கதன்னெஞ்சு. (உகூ)

## வாய்மை.

பொங்குபுகழ்வாய்மைப்புனிதவதியார்க்கரனூர்
செங்கனியையீந்தார்சிவசிவா—துங்க
மனத்தொடுவாய்மைமொழியிற்றவத்தொடு
தானஞ்செய்வாரிற்றலை. (௩௦)

பிள்ளையுடனுண்ணப்பேசியழைத்தாரன்பு
துள்ளுசிறுத்தொண்டர்சோமேசா—வுள்ளுங்காற்
பொய்மையும்வாய்மையிடத்தபுரைதீர்ந்த
நன்மைபயக்குமெனின். (௩௦)

## வெகுளாமை.

தாவுசினத்தாற்றலையிழந்தான்றக்கனுமா
தேவிமகளாயுஞ்சிவசிவா—வாவன்மிகுந்
தன்னைத்தான்காக்கிற்சினங்காக்ககாவாக்காற்
றன்னையேகொல்லுஞ்சினம். (௩௧)

பல்லவர்கோன்வந்துபணியக்கருணைசெய்தார்
தொல்லைநெறிவாகீசர்சோமேசா—கொல்ல
இணரெரிதோய்வன்னவின்னுசெயினும்
புணரின்வெகுளாமைநன்று. (௩௧)

## இன்னுசெய்யாமை.

புறம்பியத்துமின்னையுயிர்போக்கவந்தான்பட்ட
திறந்தெரியாதோசிவசிவா—பிறழ்ந்து
பிறர்க்கின்னுமுற்பகற்செய்யிற்றமக்கின்னு
பிற்பகற்றுமேவரும். (௩௨)

பிள்ளையார்வைப்பினிற்றீப்பெய்வித்தமீனவன்றீத்
துள்ளுவெப்புநோயுழந்தான்சோமேசா—வெள்ளிப்
பிறர்க்கின்னுமுற்பகற்செய்யிற்றமக்கின்னு
பிற்பகற்றுமேவரும். (௩௨)

## கொல்லாமை.

மேவும்வனசரனோர்வேதியனைக்காத்தநலந்
தேவனறிவானேசிவசிவா—பூவுலகிற்
றன்னுயிர்நீப்பினுஞ்செய்யற்கதான்பிறி
தின்னுயிர்நீக்கும்வினை. (௩௩)

வேந்துமகற்றேர்க்கால்விடலஞ்சிமந்திரிதான்
சோர்ந்துதனதாவிவிட்டான்சோமேசா— வாய்ந்துணர்ந்தோர்
தன்னுயிர்நீப்பினுஞ்செய்யற்கதான்பிறி
தின்னுயிர்நீக்கும்வினை. (௩௩)

## நிலையாமை.

எங்குமிறவானிறந்ததொருதூணின்ற
சிங்கத்தாலன்றேசிவசிவா—தங்கிநிலை
நில்லாதவற்றைநிலையினவென்றுணரும்
புல்லறிவாண்மைகடை. (௩௪)

ஆக்கையுமாயிரத்தெட்டண்டங்களுநிலையாத்
தூக்கியழிந்தான்சூரன்சோமேசா—நோக்கியிடில்
நில்லாதவற்றைநிலையினவென்றுணரும்
புல்லறிவாண்மைகடை. (௩௪)

## துறவு.

பத்ரகிரிமாதர்வசப்பட்டமனமீட்டதொரு
சித்ரகதையன்றேசிவசிவா—வொத்துத்
தலைப்பட்டார்தீரத்துறந்தார்மயங்கி
வலைப்பட்டார்மற்றையவர். (௩௫)

கோவணமொன்றிச்சிப்பக்கூடினவேபந்தமெல்லாந்
தூவணஞ்சேர்மேனியாய்சோமேசா—மேவில்
இயல்பாகுநோன்பிற்கொன்றின்மையுடைமை
மயலாகுமற்றும்பெயர்த்து. (௩௫)

## மெய்யுணர்தல்.

சொற்சுவைசேர்வாசகத்திற்சொன்னபொருளீதென்றே
சிற்சபையேபோனர்சிவசிவா—நற்கலைநூற்
கற்றீண்டுமெய்ப்பொருள்கண்டார்தலைப்படுவர்
மற்றீண்டுவாராநெறி. (௩௬)

காரிகையாரைப்பொன்னைக்காட்டவுங்காமாதிமும்மைச்
சோர்விழந்துய்ந்தாரரசர்சோமேசா—வோருங்காற்
காமம்வெகுளிமயக்கமிவைமூன்ற
னாமங்கெடக்கெடுநோய். (௩௬)

## அவாவறுத்தல்.

சாரங்கமீதுசடபரதன்சிந்தைவைத்துச்
சேரங்கம்பெற்றான்சிவசிவா—நேரு
மவாவென்பவெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுந்
தவாஅப்பிறப்பீனும்வித்து. (௩௬)

தாய்கருவில்வாழ்குழவிதாமெல்லாம்வேண்டுவது
தூயபிறவாமையொன்றேசோமேசா—வாயதனால்
வேண்டுங்கால்வேண்டும்பிறவாமைமற்றது
வேண்டாமைவேண்டவரும். (௩௭)

## ஊழ்.

உற்றாளைப்பெட்டகத்திட்டோட்டுமிலங்கேசனைப்பின்
செற்றாள்வந்தென்பார்சிவசிவா—வுற்றோரி
னூழிற்பெருவலியாவுளமற்றொன்று
சூழினுந்தான்முந்துறும். (௩௮)

முன்னரமண்மதத்துமூண்டரசர்பின்சைவந்
துன்னியதுமென்வியப்போசோமேசா—வுன்னுங்காற்
பேதைப்படுக்குமிழவூழறிவகற்று
மாகலூழுற்றக்கடை. (௩௮)

## இறைமாட்சி.

பெற்றவைக்கென்போலிரண்டுபேரிலொருவன்பிழைத்தாற்
சிற்றவைக்காமென்றான்சிவசிவா—வுற்ற
முறைசெய்துகாப்பாற்றுமன்னவன்மக்கட்
கிறையென்றுவைக்கப்படும். (௩௯)

பார்சீதைசீலம்பழித்துரைத்துங்காகுத்தன்
சேர்வுறமுன்சீறிலனேசோமேசா—தேரிற்
செவிகைப்பச்சொற்பொறுக்கும்பண்புடைவேந்தன்
கவிகைக்கீழ்த்தங்குமுலகு. (௩௯)

## கல்வி.

பார்க்கவன்பாற்கல்விபயின்றகயன்பார்க்கவனேய்
தீர்க்கவரம்பெற்றான்சிவசிவா—வேற்கநன்றாக்
கற்கசடறக்கற்பவைகற்றபி
னிற்கவதற்குத்தக. (சo)

சம்பந்தர்நாவரசர்பாற்கண்டோஞ்சார்ந்துவப்ப
தும்பிரிவினுள்ளுவதுஞ்சோமேசா—நம்பி
உவப்பத்தலைக்கூடியுள்ளப்பிரித
லனைத்தேபுலவர்தொழில். (சo)

## கல்லாமை.

புத்தர்மிகவாதுபுகன்றதுபோய்வாதவூர்ச்
சித்தர்முனேதானார்சிவசிவா—வொத்தநெறி
கல்லாதவருநனிநல்லர்கற்றார்முற்
சொல்லாதிருக்கப்பெறின். (சக)

மெய்த்ததிருவள்ளுவனார்வென்றுயர்ந்தார்கல்விநலந்
துய்த்தசங்கத்தார்தாழ்ந்தார்சோமேசா—வுய்த்தறியின்
மேற்பிறந்தாராயினுங்கல்லாதார்கீழ்ப்பிறந்துங்
கற்றாரனைத்திலர்பாடு. (சக)

## கேள்வி.

வெய்யமரப்பேருரைத்தவேடனும்வான்மீகியெனுந்
தெய்வமுனியானான்சிவசிவா—துய்ய
செவியுணர்விற்கேள்வியுடையாரவியுணவி
னான்றாரோடொப்பர்நிலத்து. (சஉ)

ஊனுக்கூனென்னுமுரைகண்டுவந்தனரே
தூநற்சீர்க்கண்ணப்பர்சோமேசா—வானதனாற்
கற்றிலனாயினுங்கேட்கவஃதொருவற்
கொற்கத்தினூற்றாந்துணை. (சஉ)

## அறிவுடைமை.

சனகனுலகநெறிதாவாதஞான
தினகரனானன்சிவசிவா—மனதினுட
னெவ்வதுறைவதுலகமுலகத்தோ
டவ்வதுறைவதறிவு. (சஙு)

அன்றமணர்தீவைப்பவஞ்சியதென்னென்னன்மின்
றுன்றியசீர்ச்சம்பந்தர்சோமேசா—நன்றேயாம்
அஞ்சுவதஞ்சாமைபேதைமையஞ்சுவ
தஞ்சலறிவார்தொழில். (சஙா)

## குற்றங்கடிதல்.

தன்மகனன்கன்றினுக்குந்தான்மந்திரிக்குமென்றான்
சென்மமன்றேசென்மஞ்சிவசிவா—வுன்னுங்காற்
றன்குற்றநீக்கிப்பிறர்குற்றங்காண்கிற்பி
னென்குற்றமாகுமிறைக்கு. (சஎ)

ஈரைந்தலையானனுகியபின்னேகலுற்றுச்
சூரந்தொலைந்தானேசோமேசா—வோரின்
வருமுன்னர்க்காவாதான்வாழ்க்கையெரிமுன்னர்
வைத்தூறுபோலக்கெடும். (சஅ)

## பெரியாரைத்துணைக்கோடல்.

வன்றொண்டர்சேரரையும்வாவென்றரனழைப்பச்
சென்றுதெரிவித்தார்சிவசிவா—வென்றுமென்றுந்
தம்மிற்பெரியார்தமராவொழுகுதல்
வன்மையுளெல்லாந்தலை. (சகூ)

எத்திறமுமேயர்கோனட்பாமாறெண்ணினரே
சுத்தநெறியாரூரர்சோமேசா—வைத்த
அரியவற்றுளெல்லாமரிதேபெரியாரைப்
பேணித்தமராக்கொளல். (சகூ)

## சிற்றினஞ்சேராமை.

அறியவசமோகலைக்கோட்டந்தணனுமாதர்
செறியவசத்தன்சிவசிவா—பிறிதென்
மனநலமன்னுயிர்க்காக்கமினநல
மெல்லாப்புகழுந்தரும். (சசா)

அற்காவமண்மொழிகேட்டல்லலுற்முன்மாறனில்லாள்
சொற்கேட்டுநோய்தீர்ந்தான்சோமேசா—தற்காக்கும்
நல்லினத்தினூங்குந்துணையில்லைதீயினத்தி
னல்லற்படுப்பதூஉமில். (ருசா)

## தெரிந்துசெயல்வகை.

பன்மறையோர்க்கானளித்தபாரரசன்கோம்பியெனுஞ்
சென்மமெடுத்தான்சிவசிவா—வுன்னின்மிகு
நன்முற்றலுள்ளுந்தவறுண்டவரவர்
பண்பறிந்தாற்றாக்கடை. (சஎ)

சாணக்கியயிச்சித்துத்தன்னுயிரும்போக்கினனே
தூநீரிலங்கையர்கோன்சோமேசா—வானதனுல்
ஆக்கங்கருதிமுதலிழக்குஞ்செய்வினை
யூக்காரறிவுடையார். (சஎ)

## வலியறிதல்.

நீசவுருவனின்னடிரிசங்கு
தேசிகனுற்பெற்முன்சிவசிவா—பேசின்
வினைவலியுந்தன்வலியுமாற்முன்வலியுந்
துணைவலியுந்தூக்கிச்செயல். (சஅ)

சக்கரத்தையேற்பன்சலந்தரனென்றெடுத்துத்
துக்கமுற்றுவீடினனேசோமேசா—வொக்கும்
உடைத்தம்வலியறியாரூக்கத்தினூக்கி
யிடைக்கண்முரிந்தார்பலர். (சஅ)

## காலமறிதல்.

யோகிருந்தகாலமுணராதுறுமதனன்
றேகமிழந்தான்சிவசிவா—வாகி
லருவினையென்பவுளவோகருவியாற்
காலமறிந்துசெயின். (சகூ)

வீமனவைமுன்மனையைவேட்டானைக்கண்டுமொரு
தூமொழியேனும்புகலான்சோமேசா—வாமென்றே
ஊக்கமுடையானொடுக்கம்பொருதகர்
தாக்கற்குப்பேருந்தகைத்து. (சகூ)

## இடனறிதல்.

வயத்திரதமேறிவருமபிமன்றன்னைச்
செயத்திரதன்கொன்றான்சிவசிவா—முயற்சியுட
னெண்ணியாரெண்ணமிழப்பரிடனறிந்து
துன்னியார்துன்னிச்செயின். (ருo)

காட்டுமுயலுங்கதக்கரியைக்கொல்லுமாற்
றோட்டலர்நீர்க்கச்சியினுட்சோமேசா—நாட்டியிடின்
ஆற்றாருமாற்றியடுபவிடனறிந்து
போற்றார்கட்போற்றிச்செயின். (ருo)

## தெரிந்துதெளிதல்.

அத்தன்பதத்தியற்றுமாழிசலந்தரனைச்
சித்ரவதைசெய்தசிவசிவா—தத்தம்
பெருமைக்குமேனைச்சிறுமைக்குந்தத்தங்
கருமமேகட்டளைக்கல். (ருக)

தேரருமானந்தனைமுன்றேறிப்பழிபூண்டான்
சூரியபன்மாவென்பான்சோமேசா—தாரணிமேல்
தேரான்பிறனைத்தெளிந்தான்வழிமுறை
தீராவிடும்பைதரும். (ருக)

## தெரிந்துவினையாடல்.

சதமுகனைராகவனுஞ்சானகியைக்கொண்டே
சிதையவதைத்தான்சிவசிவா—விதயத்
திதனையிதனாலிவன்முடிக்குமென்றாய்ந்
ததனையவன்கண்விடல். (ருஉ)

தேசிகனைக்கொண்டசுரரிறைக்குத்தீங்கிழைத்தான்
றாசார்துவட்டாச்சேய்சோமேசா—பேசில்
எனைவகையாற்றேறியக்கண்ணும்வினைவகையான்
வேறாகுமாந்தர்பலர். (ருஉ)

## சுற்றந்தழால்.

அன்றுதமருள்ளமறிந்தடைந்தவீடணற்குச்
சென்றுறுதிசொன்னான்சிவசிவா—வொன்று
முழைப்பிரிந்துகாரணத்தின்வந்தானைவேந்த
னிழைத்திருந்தெண்ணிக்கொளல். (ருங)

ஆர்வீடணனோடளவளாவாதரக்கன்
சோர்விலாவாழ்விழந்தான்சோமேசா—நேரே
அளவளாவில்லாதான்வாழ்க்கைகுளவளாக்
கோடின்றிநீர்நிறைந்தற்று. (ருங)

## பொச்சாவாமை.

இப்புவிமேற்கோயிலிறந்ததயனார்மறந்து
செப்புதலாலன்றோசிவசிவா—வெப்பொழுதும்
பொச்சாப்புக்கொல்லும்புகழையறிவினை
நிச்சநிரப்புக்கொன்றாங்கு. (ருச)

முப்புரத்தோர்வேவவுடனிருந்தமூவரே
துப்பினாற்கண்டறிந்தார்சோமேசா—வெப்பால்
இகழ்ச்சியிற்கெட்டாரையுள்ளுகதாந்தம்
மகிழ்ச்சியின்மைந்துறும்போழ்து. (ருச)

## செங்கோன்மை.

மங்காதமங்குறளைமாறன்விலங்கிட்டான்
செங்கோன்மகிமைசிவசிவா—வெங்கேனும்
வேலன்றுவென்றிதருவதுமன்னவன்
கோலதூஉங்கோடாதெனின். (ருரு)

மைந்தனெனுமலசமஞ்சன்றளைவெறுத்தான்
சுந்தரச்செங்கோற்சகரன்சோமேசா—முந்துங்
குடிபுறங்காத்தோம்பிக்குற்றங்கடிதல்
வடுவன்றுவேந்தன்றொழில். (ருரு)

## கொடுங்கோன்மை.

தாதைசிறையிருக்கத்தங்கையழக்கஞ்சனுறுந்
தீதையெவர்சொல்வார்சிவசிவா—மேதினியி
லல்லற்பட்டாற்றாதழுதகண்ணீரன்றே
செல்வத்தைத்தேய்க்கும்படை. (ருசு)

ஐவரில்லாளழுதவன்றேகண்டேக்குற்றார்
துய்யகங்கைசேய்முதலோர்சோமேசா—மெய்யேயாம்
அல்லற்பட்டாற்றாதழுதகண்ணீரன்றே
செல்வத்தைத்தேய்க்கும்படை. (ருசு)

## வெருவந்தசெய்யாமை.

வண்ணமகனேவவருகீசகன்மடிந்தான்
றிண்ணமிதுவன்றோசிவசிவா—வெண்ணின்
வெருவந்தசெய்தொழுகும்வெங்கோலனாயி
னொருவந்தமொல்லைக்கெடும். (ருஎ)

வெய்துரையாலக்கணமேவீந்தான்சிசுபாலன்
றெய்யின்முலையுமைபாற்சோமேசா—வுய்யாக்
கடுஞ்சொல்லன்கண்ணிலனாயினெடுஞ்செல்வ
நீடின்றியாங்கேகெடும். (ருஎ)

## கண்ணோட்டம்

முப்புரத்தைநீறுக்கிமூவரையுங்காத்தநலஞ்
செப்பமுடியாதேசிவசிவா—வொப்பிற்
கருமஞ்சிதையாமற்கண்ணோடவல்லாற்
குரிமையுடைத்திவ்வுலகு. (ருஅ)

மாலான்முதலிகிழ்ந்தவானவர்தீங்கும்பொறுத்துத்
தோலாவிடமுண்டாய்சோமேசா—சால
ஒறுத்தாற்றும்பண்பினார்கண்ணுங்கண்ணோடிப்
பொறுத்தாற்றும்பண்பேதலை. (ருஅ)

## ஒற்றாடல்.

வந்தசுகசாரர்வடிவைநிருதனன்றிச்
சிந்தைசெய்தார்காண்பார்சிவசிவா—பந்தந்
துறந்தார்படிவத்தராகியிறந்தாராய்ந்
தென்செயினுஞ்சோர்விலதொற்று. (ருகூ)

வேடனில்லாள்வீந்ததிறமீனவற்குநீதெரித்தாய்
சோதிபழியஞ்சுஞ்சோமேசா—பூதலத்தின்
எல்லார்க்குமெல்லாநிகழ்பவையெஞ்ஞான்றும்
வல்லறிதல்வேந்தன்றொழில். (ருகூ)

## ஊக்கமுடைமை.

நல்லதினமென்றேநரகனிறுநாளுலகிற்
செல்லவரம்பெற்றான்சிவசிவா—வல்லமைசே
ருள்ளமிலாதவரெய்தாருலகத்து
வள்ளியமென்னுஞ்செருக்கு. (சுo)

வெங்கரியைப்பாகரைமுன்வீட்டினரேகராய்த்
துங்கவெறிபத்தர்சோமேசா—வங்கம்
பரியதுகூர்ங்கோட்டதாயினும்யானை
வெரூஉம்புலிதாக்குறின். (சுo)

## மடியின்மை.

தந்தையுள்நோக்கித்தவமேவிய துருவன்
சிந்தைவலிதன்றோசிவசிவா—நந்து
மடியிலாமன்னவனெய்துமடியளந்தான்
றாஅயதெல்லாமொருங்கு. (சுக)

பொன்மலையின்வேங்கைபொறித்துமீண்டான்சென்னி
தொன்மைவலியாண்மையினாற்சோமேசா—பன்னின்
மடியிலாமன்னவனெய்தும்டியளந்தான்
றாஅயதெல்லாமொருங்கு. (சுக)

## ஆள்வினையுடைமை.

எய்தாதிராமற்கிலக்குவன்போலென்றுரைக்கச்
செய்தானடிமைசிவசிவா—நொய்தேனு
மின்பம்விழையான்வினைவிழைவான்றன்கேளிர்
துன்பந்துடைத்தூன்றுந்தூண். (சுஉ)

கூற்றுவர்மூவேந்தர்நிலமுங்கைக்கொண்டாரே
தோற்றுந்தாளாண்மையினாற்சோமேசா—சாற்று
முயற்சிதிருவினையாக்குமுயற்றின்மை
யின்மைபுகுத்திவிடும். (சுஉ)

## இடுக்கணழியாமை.

இரணியன்றான்செய்தவிடும்பைதனைமைந்தன்
றிரணமாக்கண்டான்சிவசிவா—முரணி
யடுக்கிவரினுமழிவிலானுற்ற
விடுக்கணிடுக்கட்படும். (சுங)

என்றுமொருமீனேவந்தின்மைமிகவுந்தளரார்
துன்றேரதிபத்தர்சோமேசா—மன்ற
அடுக்கிவரினுமழிவிலானுற்ற
விடுக்கணிடுக்கட்படும். (சுங)

## அமைச்சு.

போயவரசாளிபுகவெழக்கண்டாளியுடல்
நீயினமைச்சிட்டான்சிவசிவா—வாயிற்
றெரிதலுந்தேர்ந்துசெயலுமொருதலையாச்
சொல்லலும்வல்லதமைச்சு. (சுஉ)

கால்சேய்கதிர்சேயைக்காத்தரசனட்புதவித்
தூலமுடிசூட்டுவித்தான்சோமேசா—சாலப்
பிரித்தலும்பேணிக்கொளலும்பிரிந்தார்ப்
பொருத்தலும்வல்லதமைச்சு. (சுஉ)

## சொல்வன்மை.

என்றும்பதினறெனவரனாரோதியசொல்
சென்றதேயின்றுஞ்சிவசிவா—நன்றிபெறச்
சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து. (சுரு)

நித்தியதுவங்கேட்பானித்திரையென்றேமயக்கந்
துய்த்தனனுங்கும்பகன்னன்சோமேசா—வெத்திறத்தும்
ஆக்கமுங்கேடுமதனால்வருதலாற்
காத்தோம்பல்சொல்லின்கட்சோர்வு. (சுரு)

## வினைத்தூய்மை.

மைந்தன்முடிவீழ்த்தான்மாள்கவெனக்கைவிரித்த
சிந்துபதிபட்டான்சிவசிவா—தந்தஞ்
சலத்தாற்பொருள்செய்தேமாற்றல்பசுமட்
கலத்துணீர்பெய்திரீஇயற்று. (சுசு)

தக்கனுனையெள்ளிமகஞ்சாடும்போதெண்ணியெண்ணித்
துக்கமுற்றானவதென்னேசோமேசா—வெக்காலும்
எற்றென்றிரங்குவசெய்யற்கசெய்வானேல்
மற்றன்னசெய்யாமைநன்று. (சுசு)

## வினைத்திட்பம்.

எய்துமுருவழிந்துமேந்திழையாள்பாவனைதான்
செய்தபடியாச்சேசிவசிவா—வையத்தி
னெண்ணியவெண்ணியாங்கெய்துபவெண்ணியார்
திண்ணியராகப்பெறின். (சுஎ)

செவ்வேளைப்பாலனெனவெள்ளித்திறலழிந்தான்
றுவ்வாதவெஞ்சூரன்சோமேசா—வவ்வா
றுருவுகண்டெள்ளாமைவேண்டுமுருள்பெருந்தேர்க்
கச்சாணியன்னாருடைத்து. (சுஎ)

## வினைசெயல்வகை.

மங்கைமுலைக்கச்சவிழ்த்தமாயச்சயந்தனொரு
செங்கணிழந்தான்சிவசிவா—வெங்கு
முடிவுமிடையூறுமுற்றியாங்கெய்தும்
படுபயனும்பார்த்துச்செயல். (சுஅ)

வெள்ளிவெற்பையெண்ணூதெடுப்பனெனவீறெய்தித்
துள்ளியழிந்தானரக்கன்சோமேசா—மெள்ள
முடிவுமிடையூறுமுற்றியாங்கெய்தும்
படுபயனும்பார்த்துச்செயல். (சுஅ)

## தூது.

சானகியைக்கண்டரக்கன்முனிகலிவாலிலிடுந்
தீநகரிலிட்டான்சிவசிவா—வூனுக்
கிறுதிபயப்பினுமெஞ்சாதிறைவர்க்
குறுதிபயப்பதாந்தூது. (சுகூ)

தன்றுயரநோக்கான்றனைவிடுத்தோர்க்கேயுறுதி
துன்றமொழிந்தானிடதன்சோமேசா—வென்றும்
இறுதிபயப்பினுமெஞ்சாதிறைவற்
குறுதிபயப்பதாந்தூது. (சுகூ)

## மன்னரைச்சேர்ந்தொழுகல்.

அன்றரசோடேரண்டனுடுமுரையாலவமே
சென்றுயிரையீந்தான்சிவசிவா—நன்றிபெற
வேட்பனசொல்லிவினையிலவெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ்சொல்லாவிடல். (எ0)

மாமனுனென்னுமதத்தாலுனையிகழ்ந்து
தோமுற்றார்தக்கனார்சோமேசா—வாமே
பழையமெனக்கருதிப்பண்பல்லசெய்யுங்
கெழுதகைமைகேடுதரும். (எ0)

## குறிப்பறிதல்.

வென்றியிராமனென்டுவில்லைமுனிவன்குறிப்பாற்
சென்றுவளைத்தான்சிவசிவா—மன்றிற்
குறிப்பிற்குறிப்புணர்வாரையுறுப்பினுள்
யாதுகொடுத்துங்கொளல். (எக)

அப்பூதியார்மறைத்தும்வாகீசரக்கரவைத்
துப்பானறிந்தனரேசோமேசா—விப்புவியில்
ஐயப்படாஅதகத்ததுணர்வானைத்
தெய்வத்தோடொப்பக்கொளல். (எக)

## அவையறிதல்.

மன்றிற்பரசமயகோளரிமுன்வல்லமணர்
சென்றநிலையென்னுஞ்சிவசிவா—துன்றுதுற
வாற்றினிலைதளர்ந்தற்றேவியன்புல
மேற்றுணர்வார்முன்னரிழுக்கு: (எஉ)

ஓர்சங்கத்தார்கல்வியூமைச்சேய்க்குக்காட்டிச்
சேர்வுநலந்தேர்ந்தனரேசோமேசா—வோருங்காற்
கற்றறிந்தார்கல்விவிளங்குங்கசடறச்
சொற்றெரிதல்வல்லாரகத்து. (எஉ)

## அவையஞ்சாமை.

முத்தமிழ்ச்சங்கத்தவரைமூதுரையால்வள்ளுவருஞ்
சித்தமகிழ்வித்தார்சிவசிவா—வெத்தனையுங்
கற்றாரிற்கற்றாரெனப்படுவர்கற்றார்முற்
கற்றசெலச்சொல்லுவார். (எந)

வாழ்வாதவூரர்வளவனவைமுன்னெதிர்த்துச்
சூழ்தேரரைவென்றார்சோமேசா—தாழ்வகல
ஆற்றினளவறிந்துகற்கவவையஞ்சா
மாற்றங்கொடுத்தற்பொருட்டு. (எங)

## நாடு.

பொன்னியெனவேழமுனிபொற்கரகநீர்கவிழ்த்த
சென்னிவளநாடேசிவசிவா—நன்னா
டிருபுனலும்வாய்ந்தமலையும்வருபுனலும்
வல்லரணுநாட்டிற்குறுப்பு. (எச)

மேல்வளமெல்லாமமைந்தும்வீரமகேந்திரந்தான்
றோல்வியுற்றுமாய்ந்ததேசோமேசா—ஞாலமிசை
ஆங்கமைவெய்தியக்கண்ணும்பயமின்றே
வேந்தமைவில்லாதநாடு. (எச)

## அரண்.

காத்தானசலக்கருணாகரன்கலிங்கஞ்
சேர்த்தான்றிறத்திற்சிவசிவா—பார்த்தா
லெனைமாட்சித்தாயினுமென்னாம்வினைமாட்சி
யில்லார்கணில்லாதரண். (எரு)

வல்லதிகன்றன்னரணம்வான்வளவன்சேனைசெலத்
தொல்லைவலிமாண்டதேசோமேசா—நல்ல
எனைமாட்சித்தாகியக்கண்ணும்வினைமாட்சி
யில்லார்கணில்லாதரண். (எரு)

## பொருள்செயல்வகை.

கொண்டான்வடகிரியிற்கூடலரசுபொருட்
செண்டாலடித்தேசிவசிவா—கண்டாயி
லொண்பொருள்காழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு
ளேனையிரண்டுமொருங்கு. (எசு)

உக்கிரனூர்மேருவைவென்றெண்ணிதியம்பெற்றமையாற்
றெக்ககுடிகாத்தனர்காண்சோமேசா—மிக்குயர்ந்த
குன்றேறியானைப்போர்கண்டற்றூற்றன்கைத்தோன்
றுண்டாகச்செய்வான்வினை. (எசு)

## படைமாட்சி.

பார்த்திவனைக்கட்டவிழ்த்துப்பத்ராயுவன்பகையைத்
தீர்த்தொருவனின்றான்சிவசிவா—பார்த்தங்
கொலித்தக்காலென்னுமுவரியெலிப்பகை
நாகமுயிர்ப்பக்கெடும். (எஎ)

நீநகைப்பமும்புரமுநீறாகிமாய்ந்ததே
தூநகையாள்பாலமருஞ்சோமேசா—வானின்
ஒலித்தக்காலென்னுமுவரியெலிப்பகை
நாகமுயிர்ப்பக்கெடும். (எஎ)

## படைச்செருக்கு.

உரமிறந்துபோகாதவுள்ளத்தரவான்
சிரமறுந்துற்றான்சிவசிவா—தரமா
விழுப்புண்படாதநாளெல்லாம்வழுக்கினுள்
வைக்குந்தன்னாளையெடுத்து. (எஅ)

மன்மதனின்னேடெதிர்த்துவீறழிந்துமாண்டாலுந்
துன்னுபுகழேபெற்றான்சோமேசா—புன்னெருங்குங்
கானமுயலெய்தவம்பினில்யானை
பிழைத்தவேலேந்தலினிது. (எஅ)

## நட்பு.

உற்றகுசேலனலமுற்றிருத்தற்காவுவந்தோர்
சிற்றுணவுட்கொண்டான்சிவசிவா—சுற்று
முடுக்கையிழந்தவன்கைபோலவாங்கே
யிடுக்கண்களைவதாநட்பு. (எகூ)

வாக்கரசர்பிள்ளாயென்னவலித்துமாற்றலுற்றூர்
தூக்குபிள்ளையார்செலவைச்சோமேசா—நோக்கி
நகுதற்பொருட்டன்றுநட்டன்மிகுதிக்கண்
மேற்சென்றிடித்தற்பொருட்டு. (எகூ)

## நட்பாராய்தல்.

துருவதன்கட்டுண்டான்றுரோணனடியாரா்ற்
செருவினின்முனஞ்சிவசிவா—வருவதன்மு
னுய்ந்தாய்ந்துகொள்ளாதான்கேண்மைகடைமுறை
தான்சாந்துயரந்தரும். (அ0)

போற்றுஞ்சுசீலன்புயபெலனைநீத்தகன்றான்
றேற்றிறைவிதும்பிடவுஞ்சோமேசா—வேற்றதே
ஊதியமென்பதொருவற்குப்பேதையார்
கேண்மையொரீஇவிடல். (அ0)

## பழமை.

குறித்தரசுகன்னனுடன்கோதைவிளையாடத்
தெறித்தமணியுஞ்சிவசிவா—பொறுக்கி
னழிவந்தசெய்யினுமன்பறாரன்பின்
வழிவந்தகேண்மையவர். (அக)

இல்லாளைப்பற்றிழுழ்கென்றிடவுமன்புகுன்றூர்
தொல்லைநெறிநீலகண்டர்சோமேசா—வொல்லா
தழிவந்தசெய்யினுமன்பறாரன்பின்
வழிவந்தகேண்மையவர். (அக)

## நீநட்பு.

பொன்மானென்றாசைகொண்டபொன்னனையாள் பட்டதுயர்
சென்மாந்த்ரபாவஞ்சிவசிவா—சொன்னோங்
கனவினுமின்னாதுமன்னோவினைவேறு
சொல்வேறுபட்டார்தொடர்பு. (அஉ)

ஆங்காரியந்தடுத்தவங்கணைசொற்கேட்டிறந்தான்
றாங்காத்தசரதன்றான்சோமேசா—வீங்கிதனால்
ஒல்லுங்கருமமுடற்றுபவர்கேண்மை
சொல்லாடார்சோரவிடல். (அஉ)

## கூடாநட்பு.

தாய்போல்வருமங்கைதன்னட்பறிந்துமவள்
சேய்போலிருந்தான்சிவசிவா—மாயனெதிர்
நட்டார்போனல்லவைசொல்லினுமொட்டார்சொ
லொல்லையுணரப்படும். (அங)

தாய்[illegible]த்தூசுடுத்துச்சாரெனுஞ்சொற்றீதென்றா
நேயசுயோதனற்குச்சோமேசா—வாயதனால்
நட்டார்போனல்லவைசொல்லினுமொட்டார்சொ
லொல்லையுணரப்படும். (அங)

## பேதைமை.

தனறலைமேற்றன்கைவைத்தோர்தானவன்முன்பெற்றவரஞ்
சென்றிறக்கலாச்சேசிவசிவா—வென்றென்றும்
பொய்படுமொன்றோபுனைபூணுங்கையறியாப்
பேதைவினைமேற்கொளின். (அச)

வன்சமணர்தம்பிரிவால்வாகீசர்க்கின்பமன்றித்
துன்பமென்பதில்லையேசோமேசா—நன்காம்
பெரிதினிதுபேதையார்கேண்மைபிரிவின்கட்
பீழைதருவதொன்றில். (அச)

## புல்லறிவாண்மை.

மாற்குமதுவுங்கைடவனும்வாழ்நாளைத்
தீர்க்கவரமீந்தான்சிவசிவா—பார்க்கி
னறிவிலானெஞ்சுவந்தீதல்பிறிதியாது
மில்லைபெறுவான்றவம். (அரு)

இல்லாண்மறுப்பவுஞ்சென்றேகிச்சலந்தரன்றன்
ஞெல்வலிபோய்மாண்டனனேசோமேசா—வல்லமையால்
ஏவவுஞ்செய்கலான்றான்றேறானவ்வுயிர்
போறுமளவுமோர்நோய். (அரு)

## இகல்.

தாயடிமைவானமுதந்தந்தகற்றச்சார்வயின
தேயனைமால்வென்றான்சிவசிவா—வேய
விகலெதிர்சாய்ந்தொழுகவல்லாரையாரே
மிகலூக்குந்தன்மையவர். (அசு)

எத்திறத்துங்கெட்டானிகலாற்சுயோதனன்சீர்
துய்த்தனனட்பாற்றருமன்சோமேசா—மொய்த்த
இகலானுமின்னாதவெல்லாநகலானு
நன்னயமென்னுஞ்செருக்கு. (அசு)

## பகைமாட்சி.

ஐங்கரனென்றேராவரக்கன்றலைமோதிச்
செங்கரங்கணொந்தான்சிவசிவா—துங்க
வழிநோக்கான்வாய்ப்பனசெய்யான்பழிநோக்கான்
பண்பிலன்பற்றார்க்கினிது. (அஎ)

ஏனையர்பால்வெற்றிகொண்டானின்றேடெதிர்த்திறந்தான்
றாநறும்பூவாளியான்சோமேசா—மான
வலியார்க்குமாறேற்றலோம்புகவோம்பா
மெலியார்மேன்மேகபகை. (அஎ)

## பகைத்திறந்தெரிதல்.

ஐங்கரனைக்கண்டுநகைத்தாவணிநாலாந்திதியிற்
றிங்கள்பகையானான்சிவசிவா—வெங்கும்
பங்கையென்னும்பண்பிலதனையொருவ
னகையேயும்வேண்டற்பாற்றன்று. (அஅ)

நந்திகலம்பகத்தான்மாண்டகதைநாடறியுஞ்
சுந்தரஞ்சேர்தென்குளத்தூர்ச்சோமேசா—சந்ததமும்
வில்லேருழவர்பகைகொளினுங்கொள்ளற்க
சொல்லேருழவர்பகை. (அஅ)

## உட்பகை.

வென்றிபுனைசம்பரனைவென்றதவனில்லிருந்து
தென்றலெனுந்தேரான்சிவசிவா—வென்று
மரம்பொருதபொன்போலத்தேயுமுரம்பொரு
துட்பகையுற்றகுடி. (அக)

மாற்றாமுடியும்வளமையுங்கொண்டேகலந்
தோற்றான்வழுதிமகன்சோமேசா—வாற்றலிலா
எட்பகவன்னசிறுமைத்தேயாயினு
முட்பகையுள்ளதாங்கேடு. (அக)

## பெரியாரைப்பிழையாமை.

வந்தமுனிவோரைவணங்காவரமுனியைச்
சிந்தைசெயல்வேண்டுஞ்சிவசிவா—முந்தும்
பெரியாரைப்பேணுதொழுகிற்பெரியாராற்
பேராவிடும்பைதரும். (கூ0)

கொன்படைகணீறாக்கோசிகனார்சாபத்தாற்
றுன்பமுற்றார்நால்வேந்தர்சோமேசா—வின்புதவும்
ஏந்தியகொள்கையார்சீறினிடைமுரிந்து
வேந்தனும்வேந்துகெடும். (கூ0)

## பெண்வழிச்சேறல்.

ஓதுகனிபொருந்துமுங்கண்மனத்தினுற்ற
சேதிசொல்லினென்றான்சிவசிவா—வாதலினு
வில்லாள்கட்டாழ்ந்தவியல்பின்மையெஞ்ஞான்று
நல்லாருணாணுத்தரும். (௬௧)

கற்பின்மையில்லாள்பாற்கண்டுமயலுற்றழிந்தான்
சொற்புண்டரீகாக்கன்சோமேசா—பொற்பெண்ணி
இல்லாள்கட்டாழ்ந்தவியல்பின்மையெஞ்ஞான்று
நல்லாருணாணுத்தரும். (௬௧)

## வரைவின்மகளிர்.

போசனுரைக்கிசைந்தபுண்ணியனைவேசைகொன்று
டேசமறியாதோசிவசிவா—பேசுமிடத்
தன்பின்விழையார்பொருள்விழையுமாய்தொடியா
ரின்சொலிழுக்குத்தரும். (௬௨)

வேண்டுமுருப்பசியைப்பார்த்தன்வெறுத்தனனே
தூண்டுமறைப்பரியாய்சோமேசா—யாண்டும்
பொதுநலத்தார்புன்னலந்தோயார்மதிநலத்தின்
மாண்டவறிவினவர். (௬௨)

## கள்ளுண்ணாமை.

சுக்கிரனார்சாபத்தொடர்பறிந்தோர்கள்ளிருந்த
திக்கினடப்பாரோசிவசிவா—மக்களென்பார்
கள்ளுண்ணாப்போழ்திற்களித்தானைக்காணுங்கா
லுள்ளான்கொலுண்டதன்சோர்வு. (௬௩)

தக்கன்பான்ஞானத்ததீசியுபதேசமெல்லாந்
தொக்கதனாலானதென்னேசோமேசா—மிக்குக்
களித்தானைக்காரணங்காட்டுதல்கீழ்நீர்க்
குளித்தானைத்தீத்துரீஇயற்று. (௬௩)

### சூது.

வெற்றிநளன்சூதாடிவீடுவிட்டுக்காடுறைந்தான்
சிற்றிடையுந்தானுஞ்சிவசிவா—சுற்று
முடைசெல்வமூணொளிகல்வியென்றைந்து
மடையாவாமாயங்கொளின். (௧௪)

முற்பணயத்தாற்பின்னுமூண்டிழந்தார்சூதரொடு
சொற்படுஞ்சூதாடினோர்சோமேசா—வற்பமாம்
ஒன்றெய்திநூறிழக்குஞ்சூதர்க்குமுண்டாங்கொ
னன்றெய்திவாழ்வதோராறு. (௧௪)

### மருந்து.

மாதவரூண்மாமருதின்மங்கையர்க்குமுற்பிறப்பின்
சேதிதெரிவிக்குஞ்சிவசிவா—வாதலினான்
மாறுபாடில்லாதவுண்டிமறுத்துண்ணி
னூறுபாடில்லையுயிர்க்கு. (௧௫)

நல்லதிலகவதியார்மொழியைநம்பிவெங்நோய்
சொல்லரசர்தீர்ந்துய்ந்தார்சோமேசா—புல்லிய
நோய்நாடிநோய்முதனாடியதுதணிக்கும்
வாய்நாடிவாய்ப்பச்செயல். (௧௫)

### குடிமை.

தந்தைவதுவைதவிராதுவீடுமன்போய்ச்
சிந்தைதெளிவித்தான்சிவசிவா—நந்தா
நலம்வேண்டினாணுடைமைவேண்டுங்குலம்வேண்டின்
வேண்டுகயார்க்கும்பணிவு. (௧௬)

மங்கலியம்விற்றும்வழாதுபணிசெய்துவந்தார்
துங்கமறைதேர்கலயர்சோமேசா—வங்கண்
வீழங்குவதுள்வீழ்ந்தக்கண்ணும்பழங்குடி
பண்பிற்றலைப்பிரிதலின்று. (௧௬)

## மானம்.

அன்றொருவைவேந்தனரிவைதனக்காவமர்க்குச்
சென்றுயிரையீந்தான்சிவசிவா—துன்று
மயிர்நீப்பின்வாழாக்கவரிமாவன்னா
ருயிர்நீப்பர்மானம்வரின். (௯௭)

அச்சுவத்தமாப்பட்டானென்னவமர்துறந்தான்
றுச்சிறுரோணனென்பான்சோமேசா—நச்சு
மயிர்நீப்பின்வாழாக்கவரிமாவன்னா
ருயிர்நீப்பர்மானம்வரின். (௯௭)

## பெருமை.

நல்லூழிநான்குமனுநாரியுடனண்ணவரி
செல்வமகவானான்சிவசிவா—வொல்லும்
பெருமையுடையவராற்றுவாராற்றி
னருமையுடையசெயல். (௯௮)

தண்டியடிகளிருதாளிணைபேணாதழிந்தார்
தொண்டராம்பேய்ச்சமணர்சோமேசா—மிண்டுஞ்
சிறியாருணர்ச்சியுளில்லைப்பெரியாரைப்
பேணிக்கொள்வேமென்னுநோக்கு. (௯௮)

## சான்றாண்மை.

தாருவனமுனிவர்தம்பிழைநோக்காதருளே
சேரநடஞ்செய்தான்சிவசிவா—வோருமவர்
இன்னாசெய்தார்க்குமினியவேசெய்யாக்கா
லென்னபயத்ததோசால்பு. (௯௯)

வன்மைச்சுயோதனற்கும்வானோர்சிறைமீட்டான்
றொன்மைநெறித்தருமன்சோமேசா—பன்முறையும்
இன்னாசெய்தார்க்குமினியவேசெய்யாக்கா
லென்னபயத்ததோசால்பு. (௯௯)

## பண்புடைமை.

பாந்தட்பகைமுயலைப்பற்றுதலாலென்றுமதி
தேர்ந்துமதைநீக்கான்சிவசிவா—கூர்ந்த
வரம்போலுங்கூர்மையரேனுமரம்போல்வர்
மக்கட்பண்பில்லாதவர். (கூ00)

உன்பணிக்கென்றேதிநல்காச்செல்வமுத்தியுறத்
துன்பமுற்றார்நால்வணிகர்சோமேசா—வன்புமிகும்
பண்பிலான்பெற்றபெருஞ்செல்வநன்பால்
கலந்தீமையாற்றிரிந்தற்று. (கூ00)

## நன்றியில்செல்வம்.

நல்விசயன்கண்ணன்வரநன்மைபுரியாமறையோன்
செல்வமிருந்தென்னுஞ்சிவசிவா—தொல்லுலகி
னச்சப்படாதவன்செல்வநடுவூரு
ணச்சுமரம்பழுத்தற்று. (கூ0க)

எல்லாமறையவர்க்கீந்தேவறியன்போலானன்
சொல்லாருங்கீர்த்திரகுச்சோமேசா—நல்லதே
சீருடைச்செல்வர்சிறுதுனிமாரி
வறங்கூர்ந்தனையதுடைத்து. (கூ0க)

## நாணுடைமை.

சாரும்பதியிலராய்த்தாருவனமாதர்தமைச்
சேரவிறைசென்றான்சிவசிவா—பாரின்மிசை
நாணகத்தில்லாரியக்கமரப்பாவை
நாணாலுயிர்மருட்டியற்று. (கூ0உ)

புண்ணேடுயிர்வாழநாணியுயிர்போக்கினன்
றுண்ணெனவேவாலிமுனஞ்சோமேசா—வெண்ணியிடில்
நாணாலுயிரைத்துறப்பருயிர்ப்பொருட்டா
னண்டுறவார்நாணாள்பவர். (கூ0உ)

## குடிசெயல்வகை.

துய்யபகீரதனுர்தொல்லரசரல்லலறச்
செய்தவமென்சொல்வாஞ்சிவசிவா—வையமதி
னல்லாண்மையென்பதொருவற்குத்தான்பிறந்த
வில்லாண்மையாக்கிக்கொளல். (௧0௩)

மற்றிருதராட்டிரன்சந்தானமெலாமாய்ந்ததே
சுற்றுநீர்த்தென்குளத்தூர்ச்சோமேசா—பற்றும்
இடுக்கண்கால்கொன்றிடவீழுமடுத்தூன்று
நல்லாளிலாதகுடி. (௧0௩)

## உழவு.

வள்ளிபுனங்காத்திருந்தவாறேதுவான்பயிர்செய்
தெள்ளிமையாலன்றோசிவசிவா—வுள்ளுமிடத்
தேரினுநன்றாலெருவிடுதல்கட்டபி
னீரினுநன்றதன்காப்பு. (௧0[illegible])

வேள்வித்தொழிற்குமுழுதொழின்முன்வேண்டுமோல்
சூழிசூழ்தென்குளத்தூர்ச்சோமேசா—வாழும்
உழவினார்கைம்மடங்கினில்லைவிழைவதூஉம்
விட்டேமென்பார்க்குநிலை. (௧0௪)

## நல்குரவு.

மாமணியாற்கோசிகன்போய்மன்விடந்தீரான்வறுமைத்
தீமையினான்மீண்டான்சிவசிவா—வாமு
னறன்சாராநல்குரவீன்றதாயானும்
பிறன்போலநோக்கப்படும். (௧0௫)

நற்றருமன்வெற்றியினைநாடிவிராடனெதிர்
சொற்றமொழிசோர்ந்ததேசோமேசா—கற்றறிவால்
நற்பொருணன்குணர்ந்துசொல்லினுநல்கூர்ந்தார்
சொற்பொருள்சோர்வுபடும். (௧0௫)

## இரவு.

தருமகுணமாவலிபாற்றானமெனச்சேர்ந்தான்
றிருமகிணன்றான்சிவசிவா—பரிவி
னிரத்தலுமீதலேபோலுங்கரத்தல்
கனவிலுந்தேற்றாதார்மாட்டு. (௧௦௬)

கஞ்சாறர்சோபனப்பெண்கூந்தல்கடிதளிக்கத்
துஞ்சுமகிழ்ச்சிகொண்டாய்சோமேசா—நெஞ்சின்
இகழ்ந்தெள்ளாதீவாரைக்காணின்மகிழ்ந்துள்ள
முள்ளுளுவப்பதுடைத்து. (௧௦௬)

## இரவச்சம்.

ஒன்றுதவவேடமுடன்சராசந்தன்முனஞ்
சென்றிரந்தார்மன்னர்சிவசிவா—வென்றுங்
கரவாதுவந்தீயுங்கண்ணன்னார்கண்ணு
மிரவாமைகோடியுறும். (௧௦௭)

எண்ணெயிரப்பஞ்சியுடலேவருத்தித்தீபமிட்டார்
துண்ணென்கணம்புல்லர்சோமேசா—கண்ணியிடில்
ஆவிற்குநீரென்றிரப்பினுநாவிற்
கிரவினிளிவந்ததில். (௧௦௭)

## கயமை.

வாரிவழிதாராவருணனடைக்கலமாய்ச்
சேரவழிசெய்தான்சிவசிவா—வாருமிதஞ்
சொல்லப்பயன்படுவர்சான்றோர்கரும்புபோற்
கொல்லப்பயன்படுங்கீழ். (௧௦௮)

ஏற்றதுரோணனையன்றெள்ளித்துருபதன்பின்
றோற்றுவிசயற்களித்தான்சோமேசா—போற்றிடினும்
ஈர்ங்கைவிதிரார்கயவர்கொடிறுடைக்குங்
கூன்கையரல்லாதவர்க்கு. (௧௦௮)

## தகையணங்குறுத்தல்.

ஆர்ந்தசுரரானாரமுதணங்கைக்கண்டுமகிழ்
சேர்ந்தசுரரானார்சிவசிவா—சார்ந்ததனை
யுண்டார்கணல்லதடுநறாக்காமம்போற்
கண்டார்மகிழ்செய்தலின்று. (௧௦௯)

வாய்ந்ததமயந்தியுருமாணலங்கண்டின்புற்றான்
றேய்ந்தபுகழாளுநளன்சோமேசா—வாய்ந்துரைக்கின்
உண்டார்கணல்லதடுநறாக்காமம்போற்
கண்டார்மகிழ்செய்தலின்று. (௧௦௯

## குறிப்பறிதல்.

பைந்தொடியுஞ்சுந்தரரும்பார்த்தகுறிப்பாலன்றே
சிந்தையுமொன்றானார்சிவசிவா—தந்தமது
கண்ணொடுகண்ணிணைநோக்கொக்கின்வாய்ச்சொற்க
ளென்னபயனுமில. (௧௧௦)

காங்கேயன்வேண்டவெறுத்துரைத்தாள்கானவர்மின்
றாங்காவளக்குளத்தூர்ச்சோமேசா—வாங்கண்
உறாஅதவர்போற்சொலினுஞ்செறாஅர்சொ
லொல்லையுணரப்படும். (௧௧௦)

## புணர்ச்சிமகிழ்தல்.

பார்த்தன்சுபத்திரைதன்பார்வையினான்மெய்வெதுப்புந்
தீத்தனைக்கொண்டான்சிவசிவா—மாத்திரைநா
நீங்கிற்றெறுங்குறுகுங்காற்றண்ணெனுந்
தீயாண்டுப்பெற்றாளிவள். (௧௧௧)

மெய்த்தவத்தைக்காசிபனும்விட்டொழிந்துமாயைபாற்
சுத்தமனம்வைத்தானேசோமேசா—வித்தலத்தில்
தாம்வீழ்வார்மென்றோட்டுயிலினினிதுகொ
றாமரைக்கண்ணானுலகு. (௧௧௧)

## நலம்புனைந்துரைத்தல்.

நந்துசசிமுகத்தைநாண்மதியென்றேநகுடன்
சிந்தைமகிழ்கொண்டான்சிவசிவா—முந்து
மறுவாய்நிறைந்தவவிர்மதிக்குப்போல
மறுவுண்டோமாதர்முகத்து. (ககஉ)

ஈன்மூன்றிலோத்தமையையிச்சிக்கிலாங்கவண்மெய்
தோன்றுமெழிலென்சொல்வேன்சோமேசா—வான்ற
மூறிமேனிமுத்தமுறுவல்வெறிநாற்றம்
வேலுண்கண்வேய்த்தோள்வட்கு. (ககஉ)

## காதற்சிறப்புரைத்தல்.

காதற்குணம்விருத்தகாசிவிபசித்துரைத்த
சேதித்திறமேசிவசிவா—நீதிச்சொ
லுள்ளுவன்மன்யான்மறப்பின்மறப்பறியே
னொள்ளமர்க்கண்ணாள்குணம். (ககந)

கானகஞ்துஞ்சீதைகலப்பாற்களித்தான்பின்னயர்ந்தான்
றாநீரயோத்தியர்கோன்சோமேசா—வானதனல்
வாழ்தலுயிர்க்கன்னளாயிழைசாத
லதற்கன்னணீங்குமிடத்து. (ககந)

## நாணுத்துறவுரைத்தல்.

சேரவிரைந்துவந்துஞ்சீதையிராமனுளந்
தேரவிருந்தாள்சிவசிவா—பாரிற்
கடலன்னகாமமுழந்துமடலேறாப்
பெண்ணிற்பெருந்தக்கதில். (ககச)

காமமிகவுழந்துந்தூதைக்கடிந்துவிட்டாள்
சோமநுதற்பரவைசோமேசா—வாமே
கடலன்னகாமமுழந்துமடலேறாப்
பெண்ணிற்பெருந்தக்கதில். (ககச)

## அலரறிவுறுத்தல்.

இந்துநுதன்மாயைவிரகெண்ணிவிலாசிசொலச்
சிந்தைமகிழ்கொண்டாள்சிவசிவா—புந்தி
களித்தொறூஉங்கள்ளுண்டல்வேட்டற்றாற்காமம்
வெளிப்படுந்தோறுமினிது. (கக௫)

ஓர்நாளகலியையைவேட்டின்றுமும்பரிறை
சோராப்பழிபூண்டான்சோமேசா—வாராயிற்
கண்டதுமன்னுமொருநாளலர்மன்னுந்
திங்களைப்பாம்புகொண்டற்று. (கக௫)

## பிரிவாற்றாமை.

கோதைவரிவிற்றடக்கைக்கொண்டல்பிரிவாற்றாமற்
சீதைவனம்போனாள்சிவசிவா—வோதுமிடத்
தின்னாதினனில்லூர்வாழ்தலதனினு
மின்னாதினியார்ப்பிரிவு. (கக௬)

வாழ்விழந்தவின்னலினும்வாசவர்கோன்மிக்குநொந்தான்
சூழ்சசியைமுன்பிரிந்துசோமேசா—வீழ்வார்கட்
கின்னாதினனில்லூர்வாழ்தலதனினு
மின்னாதினியார்ப்பிரிவு. (கக௬)

## படர்மெலிந்திரங்கல்.

மாறனொருநாட்பிரிவின்மங்கையர்கணீடிரவைச்
சீறியுரைசெய்தார்சிவசிவா—கூறிக்
கொடியார்கொடுமையிற்றாங்கொடியவிந்நா
ணெடியகழியுமிரா. (ககஎ)

இன்பமுற்றான்மாயைதோடோய்ந்துபின்னெண்மடங்கு
துன்பமுற்றான்காசிபன்றான்சோமேசா—வன்புடையார்க்
கின்பங்கடன்மற்றுக்காமமஃதடுங்காற்
றுன்பமதனிற்பெரிது. (ககஎ)

## கண்விதுப்பழிதல்.

நாடரியகண்ணேநளனைவிழித்தகற்றித்
தேடியழலென்னேசிவசிவா—வோடிக்
கதுமெனத்தாநோக்கித்தாமேகலுழ
மிதுநகத்தக்கதுடைத்து. (ககஅ)

தாதையன்றித்தானேதுச்சந்தனைச்சேர்ந்தின்னலுற்ருள்
சூதில்சகுந்தலைதான்சோமேசா—வோதிற்
கதுமெனத்தாநோக்கித்தாமேகலுழ
மிதுநகத்தக்கதுடைத்து. (ககஅ)

## பசப்புறுபருவரல்.

மாரன்மகன்மஞ்சமுடன்வாராமுன்வாணன்மகள்
சேருநினைவாலேசிவசிவா—சார்வாற்
பசந்தாளிவளென்பதல்லாலிவளைத்
துறந்தாரவரென்பாரில். (கககூ)

கேழ்வரைச்சேடியர்சொல்கேழ்மைக்கியற்படுஞ்சொற்
சூழ்பமின்னார்துன்பத்துஞ்சோமேசா—தாழ்வில்
பசப்பெனப்பேர்பெறுதனன்றேநயப்பித்தார்
நல்காமைதூற்றுரெனின். (கககூ)

## தனிப்படர்மிகுதி.

முல்லைமடவார்கண்ணுமுன்னின்றெருமொழியாற்
செல்லறவிரென்றூர்சிவசிவா—சொல்லி
னசைஇயார்நல்காரெனினுமவர்மாட்
டிசையுமினியசெவிக்கு. (க௨0)

பன்முநிவர்பன்னியர்கள்பண்டுன்னைக்காமுறவுந்
துன்னியருள்செய்திலையேசோமேசா—வன்னதே
நாங்காதல்கொண்டார்நமக்கெவன்செய்பவோ
தாங்காதல்கொள்ளாக்கடை. (க௨0)

## நினைந்தவர்புலம்பல்.

சந்தனுவுங்கங்கைதனைப்படத்திலேயெழுதிச்
சிந்தையலமந்தான்சிவசிவா—தந்தமனத்
துள்ளினுந்தீராப்பெருமகிழ்செய்தலாற்
கள்ளினுங்காமமினிது. (கஉக)

தன்னையேயுன்னுந்தமயந்திமாதைநளன்
றுன்னூர்போனீத்திருந்தான்சோமேசா—வன்னதே
தந்நெஞ்சத்தெம்மைக்கடிகொண்டார்நாணூர்கொ
லெந்நெஞ்சத்தோவாவரல். (கஉக)

## கனவுநிலையுரைத்தல்.

நித்திரையிலுற்றணைந்தானேயனிரத்நவல்லி
சித்திரரேகைக்குச்சிவசிவா—வொத்துரைக்கத்
துஞ்சுங்காற்றேண்மேலராகிவிழிக்குங்கா
னெஞ்சத்தாராவர்விரைந்து. (கஉஉ)

அல்லமனைமாயைகனவிலணைந்ததனற்
சொல்லரியவின்பமுற்றாள்சோமேசா—நல்ல
நனவினாற்கண்டதூஉமாங்கேகனவுந்தான்
கண்டபொழுதேயினிது. (கஉஉ)

## பொழுதுகண்டிரங்கல்.

வாடிக்கணவனுருவல்லிரவிற்பிங்கலையுந்
தேடிமனநொந்தாள்சிவசிவா—வோடிப்
பொருண்மாலையாளரையுள்ளிமருண்மாலை
மாயுமென்மாயாவுயிர். (கஉந)

வானவர்கோன்காமநோய்மாலைவரமிக்கதே
தூநீர்ப்புளினத்திற்சோமேசா—வானதே
காலையரும்பிப்பகலெல்லாம்போதாகி
மாலைமலருமிந்நோய். (கஉந)

## உறுப்புநலனழிதல்.

வைதாள்விசயன்மருவாதுருப்பசியென்
செய்வாளயர்ந்தாள்சிவசிவா—மெய்யாக்
கொடியார்கொடுமையுரைக்குந்தொடியொடு
தொல்கவின்வாடியதோள். (கஉச)

ஓதாநாளோதுகலையொத்திளைத்தாள்சீதையென்றூன்
சூதாராவான்மீகிசோமேசா—கோதில்
பணிநீங்கிப்பைந்தொடிசோருந்துணைநீங்கித்
தொல்கவின்வாடியதோள். (கஉச)

## நெஞ்சொடுகிளத்தல்.

வண்ணவுருக்குமணிமாயன்மணம்புணர்த
றிண்ணமெனவுற்றாள்சிவசிவா—வுண்ணினைவிற்
செற்றாரெனக்கைவிடலுண்டோநெஞ்சேயா
முற்றாலுறாஅதவர். (கஉரு)

அன்டன்றுறப்பவுநாளாயினிதேடித்
துன்பந்தலைக்கொண்டாள்சோமேசா—முன்பே
இருந்துள்ளியென்பரிதனெஞ்சேபரிந்துள்ளல்
பைதனோய்செய்தார்கணில். (கஉரு)

## நிறையழிதல்.

அன்றுவனத்தண்ணலருகேநிறையழிந்தார்
சென்றுமுனிமாதர்சிவசிவா—வொன்ற
நிணந்தீயிலிட்டன்னநெஞ்சினார்க்குண்டோ
புணர்ந்தூடிநிற்பேமெனல். (கஉசு)

கோற்றொடிவிற்பாய்போன்றுகூடல்வணிகமின்னார்
தோற்றுநிறையழித்தாய்சோமேசா—சாற்றுங்காற்
பன்மாயக்கள்வன்பணிமொழியன்றோநம்
பெண்மையுடைக்கும்படை. (கஉசு)

## அவர்வயின்விதும்பல்.

மன்னுமுன்கேளென்னவுஞ்சீமந்தனிதேறுமலுளஞ்
சின்னமுறலென்னேசிவசிவா—வுன்னி
லொருநாளெழுநாள்போற்செல்லுஞ்சேட்சென்றார்
வருநாள்வைத்தேங்குபவர்க்கு. (கஉஎ)

சந்திரசேனன்வரவுநோக்கியுயிர்தாங்கினளாற்
சுந்தரச்சீமந்திநிதான்சோமேசா—முந்தும்
உரனசைஇயுள்ளந்துணையாகச்சென்றார்
வரனசைஇயின்னுமுளேன். (கஉஎ)

## குறிப்பறிவுறுத்தல்

குன்றிற்சுமதிகுறிப்பாற்றருமகுத்தன்
சென்றுமயல்கொண்டான்சிவசிவா—வென்று
முகைமொக்குளுள்ளதுநாற்றம்போற்பேதை
நகைமொக்குளுள்ளதொன்றுண்டு. (கஉஅ)

சங்கிலிபாலாரூரருழிகணந்தானுகத்
துங்கமிகுமன்புவைத்தார்சோமேசா—பொங்கப்
பெரிதாற்றிப்பெட்பக்கலத்தலரிதாற்றி
யன்பின்மைசூழ்வதுடைத்து. (கஉஅ)

## புணர்ச்சிவிதும்பல்.

மன்னனகலியைநீவஞ்சனைநீங்காமலுடற்
சின்னமுறலென்னேசிவசிவா—வென்னவவற்
காணுங்காற்காணேன்றவறாயகாணுக்காற்
காணேன்றவறல்லவை. (கஉகூ)

யோசனைகந்தியினைக்காண்டலும்பேரோகைகொண்டான்
றாசனையாச்சந்தனுத்தான்சோமேசா—நேசமுடன்
உள்ளக்களித்தலுங்காணமகிழ்தலுங்
கள்ளுக்கில்காமத்திற்குண்டு. (கஉகூ)

## நெஞ்சொடுபுலத்தல்.

கன்றூல்விளவெறிந்தகண்ணனுடனெம்மைவிட்டுச்
சென்றுயேநெஞ்சேசிவசிவா—வொன்றுவித்
துன்பத்திற்கியாரேதுணையாவார்தாமுடைய
நெஞ்சந்துணையல்வழி. (கரு௦)

விக்கிரமன்மற்றொருத்திவேட்கையுற்றுந்தேடிநொந்தா
டொக்கவுருப்பசியின்சோமேசா—வொக்கும்
அவர்நெஞ்சவர்க்காதல்கண்டுமெவனெஞ்சே
நீயெமக்காகாதது. (கரு௦)

## புலவி.

சத்தியபாமைமலர்தந்திலனென்றூடவுடன்
சித்தமகிழ்வித்தான்சிவசிவா—நித்தமுணற்
குப்பமைந்தற்றுற்புலவியதுசிறிது
மிக்கற்றுனீளவிடல். (கருக)

கொண்டபரவைகொடும்புலவியெல்லாம்வன்
றொண்டர்க்குப்பேரழகேசோமேசா—தண்டா
நலத்தகைநல்லவர்க்கேஎர்புலத்தகை.
பூவன்னகண்ணரகத்து. (கருக)

## புலவிநுணுக்கம்.

இப்பிறப்பிலேபிரியேனென்றநளனேடேல்
செப்பவரிதன்றேசிவசிவா—வப்படியே
யிம்மைப்பிறப்பிற்பிரியலமென்றேனக்
கண்ணிறைநீர்கொண்டனள். (கரு௨)

சீவகன்மஞ்சரியைத்தாழ்த்துரைப்பச்சீறினளே
தூவாய்க்குணமாலைசோமேசா—வாவகையே
தன்னையுணர்த்தினுங்காயும்பிறர்க்குநீ
ரிந்நீரராகுதிரென்று. (கரு௨)

## ஊடலுவகை.

மான்மகள்பாலூடிமரமானான்மழகளிற்றின்
றேனனையாள்காந்தன்சிவசிவா—வேனெனிலங்
கூடுதல்காமத்திற்கின்பமதற்கின்பங்
கூடிமுயங்கப்பெறின். (கஙங)

காயும்புலவியில்வன்றேண்டர்கடைப்பட்டுத்
தேயுமின்பின்மேலானார்சோமேசா—வாயுங்கால்
ஊடலிற்றோற்றவர்வென்றாரதுமன்னுங்
கூடலிற்காணப்படும். (கஙங)

சிவசிவாவெண்பாவும்

சோமேசர்முதுமொழிவெண்பாவும்

## முற்றுப்பெற்றது.

ஆயிரத்தறுநூற்றேன்பதுபத்தாமாண்டுசெல்சகாப்தநாளத
னில், மாயிருஞாலத்ததிகமாந்தில்லைமன்றில்வாழ்சென்னமல்
லையர், பாயிருபெருக்கும்பரிதிபோற்பாவப்படரகற்றிடுஞ்சிவவெ
ண்பாத், தீயவைபோக்கிப்பரகதிசேரச்செப்பினன்றெளிதவத்
தவர்க்கே.

---

இத்தன்னிலை அண - உ.